# கொளத்தூர்–ரெட்டேரியில் நீர் சுத்திகரிப்பு நிலையம்

**சென்னை, ஜூலை 31:** சென்னை கொளத்தூர் - ரெட்டேரியில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை மாநகராட்சி அகரம் சந்தை தெருவில் உள்ள சென்னை மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கான கூடுதல் கட்டடத்துக்கு மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, பள்ளி மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருள்களையும் அவர் அளித்தார். பின்னர், பெரம்பூர் லூர்து மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் கோரிக்கையை ஏற்று, இசைக்கருவிகள் வாங்குவதற்கு ரூ.1 லட்சம் நிதியுதவி அளித்தார்.

இதேபோல, கொளத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் நடந்த நிகழ்வில், 130 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

கொளத்தூர் பகுதியில் உள்ள கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்கவிழாவையொட்டி, கல்லூரியில் படிக்கும் 685 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் ரூ.10 ஆயிரம் மற்றும் புத்தகப் பைகளை அளித்தார்.

**கொளத்தூர் ஏரி:** கொளத்தூர் ஏரியில் ரூ.7.30 கோடியில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக ஏரியை ஆழப்படுத்தி கரைகளை மறுசீரமைக்கும் பணிகள், உபரிநீர் கால்வாயை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை முதல்வர் ஸ்டாலின் ஆய்வுசெய்தார். மேலும், கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் அவர் திறந்துவைத்தார். இந்தத் திட்டத்தின் மூலம், கொளத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட 1 லட்சம் மக்கள் பயன்பெறுவர். இந்த நிகழ்வில், அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்**





கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நீர் பகிர்மான நிலையத்தில், ரெட்டேரியில் உள்ள நீரை சுத்திகரித்து குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் ரூ.21 கோடியே 39 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திங்கள்கிழமை திறந்துவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா உள்ளிட்டோர்.

## கல்வி எளிதாகக் கிடைத்துவிடவில்லை: முதல்வர்

**சென்னை, ஜூலை 31:** கல்வி எளிதாகக் கிடைத்து விடவில்லை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை கொளத்தூரில் திங்கள்கிழமை இரவில் நடைபெற்ற அறநிலையத் துறை கல்லூரியின் 3–ஆம் ஆண்டு தொடக்க விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: எவ்வளவு பணி இருந்தாலும், கொளத்தூர் தொகுதிக்கு வந்து, அனைவரின் முகத்தையும் பார்த்தால்தான், எனக்குப் புத்துணர்வே ஏற்படுகிறது.

தமிழ்நாட்டுக்கு முதல்வராக இருந்தாலும், கொளத்தூர் தொகுதிக்கு சட்டப் பேரவை உறுப்பினர். 2021–ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 10 கல்லூரிகள் திறக்கப்படும் என அறிவித்து, அதில் ஒன்றாக கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

கல்வி என்பது நமக்கு எளிதாகக் கிடைத்துவிடவில்லை. எத்தனையோ போராட்டத்துக்குப் பிறகு நமக்கு கல்வி கிடைத்துள்ளது. கல்வி நமக்கு மட்டுமல்ல, நம்முடைய தலைமுறையே முன்னேறுவதற்கான அச்சாரமாக அமைந்திருக்கிறது.

அதனால்தான் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டுமென்று திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிலும், பெண்கள் கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்.

அரசின் சார்பில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொண்டு நன்றாகப் படிக்க வேண்டும்.

**உயர்ந்த பதவிகள்:** நன்றாகப் படித்து, உயர்ந்த பதவிகளில் அமர வேண்டும். தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பது கல்விதான். கல்வியை யாராலும் திருட முடியாது. அதுதான் நிலையான சொத்து என்றார் முதல்வர் ஸ்டாலின்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு, சென்னை மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

EVA STALIN

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# அரசியல் அறிவோம்

ரா.ஜெ.நவீன் குமார்

அரசியல் என்றாலே பேசக் கூடாத விஷயம் என்று பலர் கூறுவது உண்டு. அதனால்தான் என்னவோ இளம் தலைமுறையினருக்கு அரசியல் அறிவு போதிய அளவு இல்லை.

அரசியல் தேவையற்ற ஒன்று என்று பலர் நினைக்கின்றனர். அரசியல் தலைவர்களின் நோக்கம் தெரியாமல், ஆட்சியில் அமர்த்துவது எப்படி சரியாக இருக்கும்? ஆகையால் அரசியல் அறிவது அவசியமாகிறது. அரசியல் தலைவர்கள் மக்களுக்குச் சேவை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

மக்களுக்கு ஒரு காலத்தில் நாட்டுப்பற்றும் இனப்பற்றும் அதிக அளவில் இருந்தது. இப்பொழுது குறைவாகக் காணப்படுகிறதோ என நினைக்கத் தோன்றுகிறது. அதிக அளவில் பொழுதுபோக்குக்கு மதிப்பு கொடுக்கிறார்கள்.

இளைஞர்கள் தினமும் செய்தித்தாள்களுக்கும் ஊடகங்களுக்கும் தங்களுடைய பொன்னான நேரத்தை செலவு செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்கள் பொழுதுபோக்க, கைப்பேசியைப் பயன்படுத்தாமல் அறிவை வளர்க்கப் பயன்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

வரலாறு தெரியவில்லை என்றால் ஒரு கட்சியின் நோக்கம் என்னவென்று கண்டறிய முடியாது. தமிழகத்தின் அடிப்படையில், இந்தியாவின் அரசியல் கொள்கைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை மத்திய கொள்கை, திராவிடம் சார்ந்தவை, மற்றொன்று தமிழ் தேசியம்.

ஒவ்வொரு கட்சியிலும், அவற்றின் கொள்கையிலும் சில சிறப்பு அம்சங்கள் உண்டு. சில பொருந்தா மாற்றுக் கருத்து உள்ள கொள்கைகளும் உண்டு.

எந்தவொரு கட்சியின் கொள்கையும் முழுமையாக ஏற்புடையது அல்லது ஏற்புடையதல்ல எனக் கூற முடியாது. பொது மக்களில் சிலர் தங்கள் வாக்குக்கு இருக்கும் மதிப்பையும் அரசியல் கட்சியின் கொள்கையையும் அறியாமல் ஏதோ ஒரு கட்சிக்கு வாக்களிக்கிறார்கள். சிலர் வாக்களிக்க விரும்பாமலும் இருக்கிறார்கள்.

தமிழகத்தில் உள்ள அடிப்படையான மூன்று அரசியல் கொள்கைகள் குறித்து பார்ப்போம்.

முதலாவதாக, மத்திய கொள்கை குறித்து காண்போம். இந்தக் கொள்கை 'ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி' என்ற வகையில் இருக்கிறது. இதை பெரும்பாலான வட மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. காரணம், ஹிந்தி மொழி அங்கே பரவலாகப் பேசப்படுகிறது.

மத்திய கட்சிகளில் இரண்டு முக்கியமான கட்சிகள் உள்ளன. இந்த வகை கட்சிகள் இந்திய ஒருமைப்பாடு குறித்து அதிக அளவில் கவனம் செலுத்துகின்றன. அதில் ஒரு கட்சியின் கொள்கைகள் சிறுபான்மை மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்துவிடுமோ என்ற சந்தேகம் நிலவுகிறது.

தென்னிந்திய மாநிலங்களைப் பொருத்தவரை இங்கே நிலை வேறாக இருக்கிறது. இதன் காரணமாக, வட இந்தியாவும் தென் இந்தியாவும் அரசியல் ரீதியாக பல வேறுபட்ட கருத்துகளைக் கொண்டதாக உள்ளன. மற்றொரு காரணம், தங்கள் கலாசாரம், பண்பாடு, மொழி போன்றவற்றை இழந்து அது இன அழிவுக்கு வழிவகை செய்துவிடும் என்ற கருத்தில் உள்ளனர்.

இரண்டாவதாக, திராவிடம் சார்ந்த கொள்கையில் உள்ள அதிக கருத்துகள் பெரியார் ஈ.வெ.ரா.வின் கருத்துகளாகவே இருக்கின்றன. ஜாதி மறுப்பு கொள்கைக்கு பெரும் ஆதரவு தெரிவிக்கிறது. தமிழகத்தில் உள்ள இரு பெரும் திராவிட கட்சிகள் இரண்டும் பெரியார் ஈ.வெ.ரா., அண்ணா ஆகியோரின் கருத்துகளைப் பின்பற்றும் இயக்கங்களாகவே உள்ளன. இந்தக் கட்சிகள்தான் தமிழகத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆட்சி செய்து வருகின்றன.

திராவிட கட்சிகளை எதிர்ப்பவர்கள் கூறுவது என்னவென்றால், தமிழ் அல்லாத பிற மொழியை தாய் மொழியாகக் கொண்ட நபர்கள் ஆட்சி செய்வதற்குப் பயன்படுத்தியதுதான் திராவிடம் என்கிறார்கள். இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்தபோது தமிழக மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் மௌனமாக இருந்தது இதற்குச் சான்று என்கிறார்கள். மேலும், தமிழ் தாய்மொழியாக அல்லாதவர்கள்தான் தமிழகத்தில் அதிக காலம் ஆட்சி செய்தார்கள் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

மூன்றாவதாக, நாம் காணும் கொள்கை தமிழ்த் தேசியம். இது திராவிட கொள்கைகளுக்கு எதிராக வளர்ந்துவரும் புதிய கொள்கையாகும். தமிழ் அல்லாத பிறமொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களைத் தவிர்த்து தமிழர்கள் இந்த மாநிலத்தை ஆட்சி செய்ய வேண்டும் என்பதுதான். தமிழர் இனப் பெருமை பேசுவது, தமிழ் மொழியின் பெருமை பேசுவது மட்டும் தமிழ்த் தேசியம் ஆகாது. 'எமது தேசிய இனம் தமிழர், எமது தேசிய மொழி தமிழ், எமது தேசம் தமிழ்த் தேசம், இறையாண்மை உள்ள தமிழ்த் தேசம்' எனது இலக்கு' என்றும் கருதுவதே தமிழ்த் தேசியம்.

'தமிழர்களுக்கு இனப்பற்று, தமிழ்ப் பற்று வரவேண்டும், தமிழினத்தைப் பாதுகாக்க வேண்டும்' என்பதே இந்தக் கொள்கையின் சிறப்பு. தமிழ்க் குடிகளில் உள்ள வேறுபாடுகளை நீக்கி தமிழ்க் குடிகள் இணைந்த அரசியல் என்பதே இதன் கொள்கை. ஆனால், தமிழ்த் தேசியத்தில் சில முரண் கருத்துகளும் உள்ளன. இங்கு அவர்கள் தமிழர்களை அடையாளம் காண்பதற்கு ஜாதியைப் பயன்படுத்துவதுதான்.

ஏனெனில், தமிழகத்தில் அதிகம் பேசப்படும் கருத்து திராவிடம்தான். இதற்கு தமிழ்த் தேசியவாதிகள் திராவிடர்கள் ஜாதியை அழிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம் என்னவென்றால் யார் தமிழர்கள் என்று தமிழர்களுக்குத் தெரியாமல் இருந்தால் மட்டுமே தமிழ் தாய்மொழியாக இல்லாதவர்கள் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்பதால்தான் என்கிறார்கள்.

இவற்றை மட்டுமல்ல; இன்னும் ஆர்வம் உள்ளோர் அரசியல் குறித்தான தங்கள் பார்வையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசியல் இல்லாமல் எதுவும் இல்லை என்ற நிலை உள்ளது. விளையாட்டு முதல் விலைவாசி வரை அனைத்து இடங்களிலும் அரசியல் உண்டு.

இளம் தலைமுறையினர் அரசியலில் தலையிட வேண்டும்; இல்லை என்றால், அரசியல் அவர்களுடைய வாழ்க்கையில் தலையிடும்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நிலவின் சுற்றுப் பாதைக்குள் 'சந்திரயான்-3'

**சென்னை, ஜூலை 31:** புவி வட்டப் பாதையில் பயணித்து வந்த 'சந்திரயான்-3' விண்கலத்தை நிலவின் சுற்றுப் பாதைக்குள் செலுத்தும் பணிகளை இஸ்ரோ முன்னெடுத்துள்ளது.

அது வெற்றியடையும்பட்சத்தில் செவ்வாய்க்கிழமை (ஆக.1) முதல் நிலவின் ஈர்ப்பு விசைக்குள் சந்திரயான் பயணிக்கத் தொடங்கும். அதன் தொடர்ச்சியாக வரும் 17-ஆம் தேதி உந்துகலனில் இருந்து (ப்ரபல்யூசன் மாட்யூல்) லேண்டர் கலன் விடுவிக்கப்படும்.

அதன் பின்னர் திட்டமிட்டபடி ஆக.23-ஆம் தேதி மாலை 5.47 மணிக்கு நிலவின் தென் துருவத்தையொட்டிய பகுதியில் லேண்டர் கலன் தரையிறங்கி ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கும். அதன் பின்னர் அதிலிருந்து ரோவர் கலன் வெளியேறி நிலவின் தரையில் பயணித்து ஆய்வுகளை நடத்தவுள்ளது.

நிலவின் தென் துருவத்துக்கு மிக அருகில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்து, எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

குறைந்தபட்சம் 170 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ தொலைவும் கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து விண்கலத்தின் சுற்றுப் பாதையை உயர்த்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 'சந்திரயான்-3' விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு ஐந்தாவது முறையாக அதிகரிக்கப்பட்டு குறைந்தபட்சம் 236 கி.மீ தொலைவும், அதிகபட்சம் 1,27,609 கி.மீ தொலைவும் கொண்ட பாதையில் விண்கலம் பயணித்து வந்தது.

தற்போது அதற்கு அடுத்தகட்டமாக சந்திரயான்-3 விண்கலத்தை நிலவின் சுற்றுப்பாதைக்குள் செலுத்தும் பணிகள் திங்கள்கிழமை நள்ளிரவில் மேற்கொள்ளப்பட்டன.

# செயற்கை நுண்ணறிவு-சட்டம் அவசியமா?

தொழில்நுட்பம் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது. புதிய தொழில்நுட்பங்கள் மக்களின் வாழ்க்கை முறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. அந்த வகையில், மக்கள் அனைவரையும் கவர்ந்துள்ள புதிய தொழில்நுட்பமாக செயற்கை நுண்ணறிவு திகழ்கிறது.

பூமியில் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதர்களுக்கு மட்டுமே ஆறாவது அறிவு (பகுத்தறிவு) உள்ளது. மனிதர்களைப் போலவே கணினியையும் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் தானாகச் சிந்தித்து செயல்பட வைப்பதற்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) அதைச் சாத்தியப்படுத்தும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, புதிய தொழில்நுட்பங்களால் பிரச்னைகளும் ஏற்படாமல் இல்லை. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இணையவழி மோசடிகள், தரவு திருட்டு உள்ளிட்ட சம்பவங்களும் அதிகரித்தே வருகின்றன. அத்தகைய மோசடிகளை சட்டங்கள் வாயிலாகவே மத்திய, மாநில அரசுகளால் தடுக்க முடியும்.

அதைக் கருத்தில்கொண்டு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்கில் சட்டத்தை இயற்றுவது தொடர்பான விவாதம் எழுந்துள்ளது.

### மத்திய அரசின் நிலைப்பாடு

பல்துறை சார்ந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக செயற்கை நுண்ணறிவு திகழும் என்பதால், அத்தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்த சட்டத்தை இயற்றப் போவதில்லை என மத்திய அரசு கடந்த ஏப்ரலில் அறிவித்திருந்தது. ஆனால், அதற்கடுத்த இரு மாதங்களிலேயே தனது முடிவை மத்திய அரசு மாற்றிக் கொண்டது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள எண்ம இந்தியா சட்டத்தின் வாயிலாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஒழுங்குபடுத்தப்படும் என மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல்-தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

'வாடிக்கையாளர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்ற நோக்கிலேயே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஒழுங்குபடுத்தப்படவுள்ளது' என்றார் மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர்.




### நீதி ஆயோக் நிலைப்பாடு

செயற்கை நுண்ணறிவு தொடர்பான அறிக்கையை கொள்கை வகுப்பு அமைப்பான நீதி ஆயோக் கடந்த 2018-ஆம் ஆண்டில் வெளியிட்டது. அதில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் வேலையிழக்க வாய்ப்புள்ள நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆராய்ச்சிகள் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த நீதி ஆயோக், அத்தகைய ஆய்வுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு துரிதப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தது. அதற்காக, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தது.

மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கைகளை மத்திய அரசு வகுக்க வேண்டும் எனவும் நீதி ஆயோக் குறிப்பிட்டிருந்தது.

### ஆய்வுக் குழுக்களின் பரிந்துரை

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய 4 குழுக்களை மத்திய தகவல்-தொழில்நுட்ப அமைச்சகம் அமைத்தது.

அக்குழுக்கள் 2019-ஆம் ஆண்டில் அறிக்கைகளைத் தாக்கல் செய்தன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கான தரவுகள், தேசிய நலனுக்காக அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், செயற்கை நுண்ணறிவுக்கான கொள்கைகள், திறன் மேம்பாடு, இணையவழி குற்றத் தடுப்பு உள்ளிட்டவை குறித்து அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### கவனம் அவசியம்

பல்வேறு பரிந்துரைகளின் அடிப்படையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதே வேளையில், அதில் உள்ள சவால்களையும் மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவை ஒழுங்குபடுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் கூட தற்போதுதான் ஆய்வு நடத்தி வருவதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர். ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் செயற்கை நுண்ணறிவுக்கான சட்டம் அண்மையில் இயற்றப்பட்டது.

ஆனால், தேடுபொறி சார்ந்த செயற்கை நுண்ணறிவு செயலியான 'சாட்ஜிபிடி' அதன் பிறகே அறிமுகப்படுத்தப்பட்டது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அத்தகைய பயன்பாடு தொடர்பான விதிகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டத்தில் இல்லை. இது பெரும் குறைபாடாக அமைந்தது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இன்னும் முழுமையாக வளர்ச்சி காணவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் நிபுணர்கள், அவ்வாறான சூழலில் அதை ஒழுங்குபடுத்துவதற்கு அவசரகதியில் இயற்றப்படும் சட்டம் முழுமையாக இருக்காது என்று தெரிவிக்கின்றனர். தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியில் சட்டம் பின்தங்கிவிடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

# ஃபாக்ஸ்கான் நிறுவனம் ரூ.1,600 கோடி முதலீடு

## முதல்வா் முன்னிலையில புரிந்துணா்வு ஒப்பந்தம்

**சென்னை, ஜூலை 31:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் ரூ.1,600 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திங்கள்கிழமை கையொப்பமானது. மேலும், தொழில் முதலீடுகள் குறித்தும் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தினருடன் முதல்வர் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு குறித்து முதல்வர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஃபாக்ஸ்கான் குழுமத் தலைவர் யங் லியு மற்றும் அவரது குழுவினரை சந்தித்துப் பேசியதில் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தமிழ்நாட்டில் தொடங்க சாத்தியமுள்ள பல்வேறு முதலீட்டு வாய்ப்புகள் குறித்து சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைப்பேசி உதிரிபாகத் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, ரூ.1,600 கோடி முதலீடு செய்யப்பட்டு அதன் மூலமாக 6,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. மேலும், மின் வாகனங்கள் மற்றும் மின்னணு உதிரி பாகங்கள் துறை சார்ந்த முதலீடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மின்னணுப் பொருள்கள் உற்பத்தித் துறையில் ஆசியாவின் புதிய உற்பத்தி மையமாகத் தமிழ்நாட்டை உயர்த்தும் லட்சியத்தின் மற்றுமொரு மைல்கல்லாக இந்தச் சந்திப்பு அமைந்தது என அதில் தெரிவித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்.



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை திங்கள்கிழமை சந்தித்து தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் புதிய முதலீடுகள் குறித்து பேசிய அந்த நிறுவனத் தலைவர் யங் லியு. உடன் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தொழில்துறை செயலர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே.விஷ்ணு, ஃபாக்ஸ்கான் நிறுவனத் தலைமை அலுவலக இயக்குநர் செந்தில்குமார், இந்திய பிரதிநிதி பி.லீ, இணை மேலாளர் ஹன்னா வேங்.

## செடிபுட்டா சேலை, ஜடேரி நாமக்கட்டி, மட்டி வாழைப்பழம்

# தமிழகத்தின் மேலும் 3 பொருள்களுக்கு புவிசார் குறியீடு

**தஞ்சாவூர், ஜூலை 31:** திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் செடிபுட்டா சேலை, திருவண்ணாமலை ஜடேரி நாமக்கட்டி, கன்னியாகுமரி மட்டி வாழைப்பழம் ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது என அறிவுசார் சொத்துரிமை வழக்குரைஞர் சங்கத் தலைவர் பி. சஞ்சய்காந்தி தெரிவித்தார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் அவர் திங்கள்கிழமை கூறியதாவது: தமிழகத்தில் இதுவரை தஞ்சாவூர் வீணை, கலைத்தட்டு, ஓவியம் உள்பட 55 பொருள்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. தற்போது செடிபுட்டா சேலை,ஜடேரிநாமக்கட்டி,மட்டி வாழைப்பழம் ஆகிய மேலும் 3 பொருள்களுக்கு புவிசார் குறியீடு திங்கள்கிழமை கிடைத்தது.

**செடிபுட்டா சேலை:** திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே உள்ள வீரவநல்லூரில் செடிபுட்டா சேலை தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கைத்தறி சேலையில் ஒரு செடியில் பூக்களும், இலைகளும் இருப்பது போல் புட்டா போட்டு நெய்யப்பட்டது. இதனால் நாளடைவில் செடிபுட்டா என்ற பெயர் பெற்றது. பட்டு மற்றும் பருத்தி கலவை துணியில் இந்தச் சேலை தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்தச் சேலை நெசவு குஜராத்தில் இருந்து தென் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குடியேறிய செளராஷ்டிர சமூகத்தில் இருந்து உருவானது. இந்தச் சேலை கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் இதமாகவும் இருக்கும்.

**ஜடேரி நாமக்கட்டி:** திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜடேரி கிராமத்தில் 300 ஆண்டுகளாக வாழ்வாதாரத்துக்காகக் கிராம மக்கள் நாமக்கட்டிகளை உருவாக்குவதில் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளை களிமண் துண்டுகளாக நாமக்கட்டியைத் தயாரித்து வருகின்றனர். நாமக்கட்டிக்களைத் தயாரிப்பதற்கான வெள்ளை பூமி ஜடேரி கிராமத்துக்கு அருகிலுள்ள தென் பூண்டிப்பட்டில் கிடைக்கிறது. விரல் வடிவில் உள்ள இந்த நாமக்கட்டிகள் மருத்துவ பயன்களைக் கொண்டுள்ளது.

இந்த நாமக்கட்டி தயாரிக்கும் பணியில் 100-க்கும் அதிகமான குடும்பங்கள் உள்ளன. இதில் எந்தவித ரசாயனமும் கலக்கப்படுவதில்லை.

**மட்டி வாழைப்பழம்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிவார மலைகளுக்கு அருகில் மட்டி வாழைப்பழம் முக்கிய சாகுபடியாக உள்ளது. முதலையின் வாய் போல உள்ள வாழைப்பழம் முதலை விரல் வாழைப்பழம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்த வாழைப்பழம் மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய பழமாகும். அதிக மணமுடைய இந்தப் பழம் மஞ்சள் கலந்த பச்சை இலைகள் கொண்டது. இதன் அறுவடைக் காலம் செப்டம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை இருக்கும். இந்த வாழைப்பழத்தில் உள்ள பொட்டாசியம்,ஆரோக்கியமான இதயத்தையும், ரத்த அழுத்தத்தையும் பராமரிக்க உதவுகிறது. இந்த வாழைப்பழங்கள் செரிமானத்துக்கு உதவுவதுடன், இரைப்பை, குடல் பிரச்னைகளையும் சமாளிக்க உதவுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தென்னை, அச்சுவெல்லம் உள்ளிட்ட மேலும் 15 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றார் சஞ்சய்காந்தி.



தஞ்சாவூரில் புவிசார் குறியீடு கிடைத்துள்ள செடிபுட்டா சேலை, ஜடேரி நாமக்கட்டியை திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் காண்பித்த அறிவுசார் சொத்துரிமை வழக்குரைஞர் சங்கத் தலைவர் பி. சஞ்சய்காந்தி.



ஜடேரி நாமக்கட்டி



மட்டி வாழைப்பழம்

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**